DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous C.C.**No. 86/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : **இந்துமதி** (P.w.5)
Father/Husband Name : **அங்கரத்தினம்**
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day December of 2023

( எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது திருச்சுழி நாடார் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 07.11.2015 ம் தேதியன்று சீதா பாட்டி என்பவர் வீட்டில் எனது உறவினர் அமிர்தவள்ளியும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் எனது வீட்டில் இருந்தேன். எனது வீடும் சீதா பாட்டி வீடும் அருகருகே உள்ளது. அப்போது மதியம் 2 மணியளவில் திருடன் திருடன் என்று சீதா பாட்டியும்,அமிர்தவள்ளியும் கத்தினார்கள். அருகில் இருந்த அனைவரும் நானும் அங்கு போய் பார்த்தோம். அங்கு 24 வயது மதிக்கதக்க 3 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் நின்று கொண்டு இருந்தார்கள். அவர்கள் உடனே காரியாபட்டி செல்லும் ரோட்டை நோக்கி சென்றுவிட்டார்கள். அவர்கள் எனது ஆச்சியான அமிர்தவள்ளி என்பவர் கழுத்தில் அணிந்திருந்த இரண்டு பவுன் தங்க செயினை அத்துக்கொண்டு சென்று விட்டார்கள். இது சம்பந்தமாக ராமன் என்பவர் திருச்சுழி காவல் நிலையத்தில் புகார் செய்தார். எதிரிகளை காவல்

நிலையத்தில் வைத்து அடையாளம் காண்பித்தேன். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

2. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வீட்டிற்குள் அருகில் உள்ள பள்ளியில் தான் நான் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். காலை 9 மணிக்கு சென்றுவிட்டு மாலை 4 மணிக்கு வருவேன். புகார்தாரர் ராமர் எனதுகணவருடைய தம்பி ஆவார். திலகம், மகேஷ் என்பவர் எனது உறவினர்கள். அமிர்தவள்ளி என்பவரிடம் நகை பறித்தார்கள். வழக்கில் 1 முதல் 7 வரையான சாட்சிகள் அனைவரும் உறவினரும் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்களும் ஆவார்கள். சாட்சி விஜயபிரகாஷ் யார் என்று எனக்கு தெரியாது. அமிர்தவள்ளி, சீதா பாட்டி கடைக்கும் எனது வீட்டிற்கும் சுமார் 100 மீ தொலைவு இருக்கும். எனது வீட்டு பகுதி குறுகிய சந்து பகுதி ஆகும். சத்தம் போட்ட நபர்கள் யார் என்றால் அமிர்தவள்ளி, சீதா பாட்டி சத்தம்போட்டார்கள். சத்தம் கேட்டு 10, 15 நபர்கள் கூடிவிட்டார்கள். சம்பவ நடந்த இடம் திருச்சுழி–காரியாபட்டி மெயின் ரோடு. அங்கு எப்போதுமே ஆட்கள் நடமாட்டம் இருக்கும். அன்று விடுமுறை என்பதால் அவ்வாறு இல்லை. அங்குள்ள வீடுகள் நெருக்கமான வீடுகள் என்றால் சரிதான். ஆட்கள் இருக்க மாட்டார்கள். நகையை பார்த்தால் அடையாளம் தெரியும். போட்டோவில் உள்ள நகைதான் அது. நகையை திரும்பி பெற்றுக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. எனது மாமியார் என் வீட்டிலும் இருப்பார்கள் என் கொளுந்தன் வீட்டிலும் இருப்பார்கள். நான் சொல்வதுபோல் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றாலும் நகை களவு போனது எனது மாமியாரிடம் இருந்து என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அன்றைய நான் விடுமுறை நாளாகும்.

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.